# 23. COMMUNICATION

## 23.2 அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தொலைபேசி வசதி.

ஊரக வளர்ச்சி (ம) (மாஅதி4) ஊராட்சி துறை

அரசாணை (நிலை) எண். 118 நாள் : 2.7.2007

படிக்க :

1) ஊரக வளர்ச்சி மற்று பஞ்சாயத்து ராஜ் கடித எண் 18236/06 PRI. 2.3 நாள் 23.4.07
2) துணை பொது மேலாளர் சென்னை டெலிபோன்ஸ் கடித எண் DGM(Mktg/CommI/ bfone/ 2007/VoI II/part-II/3 நாள் 25.5.07
3) பொது மேலாளர் (Marketing) பிஎஸ்.என்.எல். Do No. Mktg/bfone to VP Office/ 2007–08 16.6.2007

**ஆணை**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ் நாடு சட்டமன்ற பேரவையில் இத்துறையின் மானியக்கோரிக்கையின் போது கீழ்க்கண்டவாறு அறிவித்தார்கள்.

> ''பொதுமக்களும், அலுவலர்களும் கிராம ஊராட்சிகளுடன் தொடர்பு கொள்ள ஏதுவாக, அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் இந்த ஆண்டு தொலைபேசி வசதி செய்து தரப்படும். இதன் மூலம் கிராம ஊராட்சிகள் கணினிகள் வழியாக இண்டர்நெட் (Internet) இணைப்பு பெற்று பயன்படுத்த வாய்ப்பாக அமையும்.''

2. இந்த அறிவிப்பிற்கிணங்க, இது குறித்த விரிவான கருத்துருவை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். தமிழ் நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் 5380 கிராம ஊராட்சிகளில் ஏற்கனவே தொலைபேசி வசதி உள்ளது என்றும் மீதமுள்ள 7238 கிராம ஊராட்சிகளில் தொலைபேசி வசதி இல்லாமல் உள்ளது என ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் தெரிவித்துள்ளார். கிராம ஊராட்சிகள் சிறப்பாக செயல்படுவதற்கு வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் தொடர்புடைய பிற அலுவலகங்களுடன் கிராம ஊராட்சி தலைவர் தொடர்பு கொள்ள தொலைபேசி வசதி மிகவும், அவசியம் என்றும் தொலைபேசி வசதி கிராம ஊராட்சி அலுவலகத்தில் இருக்கும் பட்சத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர், கிராம ஊராட்சித் தலைவர்களை எளிதாக தொடர்பு கொண்டு ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிக்க இயலும். அதேபோன்று கிராமங்களில் அவ்வப்போது எழும் அடிப்படை வசதிகள் பிரச்சனைகளான தெருவிளக்கு, குடிநீர் விநியோகம், சுகாதாரம் போன்றவை குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் அது தொடர்புடைய துறைகளுக்கும் எளிதாக எடுத்துச்செல்ல இயலும். எனவே கிராம ஊராட்சிகளின் செயல்பாடுகளை முன்னேற்ற தொலைபேசி வசதி மிகவும் உதவிசெய்யும் என ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் கிராம ஊராட்சிகளில் நிறுவப்படும் தொலைபேசிக்கு கிராம ஊராட்சியின் பெயர் மற்றும் தொலைபேசி கட்டணம், முகவரி ஆகிய விவரங்கள் அடங்கிய கிராம ஊராட்சிகள் வாரியான தனித்தனி விண்ணப்பங்களை வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) பூர்த்தி செய்து அனுப்பி வைக்கவேண்டும் என்றும், வட்டார வளர்ச்சி அலுவலர்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட தொலைபேசி நிறுவனங்களிடம் கொடுத்து தொலைபேசி இணைப்பு பெறுவதற்கான தொடர் நடவடிக்கையை எடுக்கும் பொருட்டு சம்மந்தப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களை பிஎஸ்என்எல் / சென்னை தொலைபேசி நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் அதிகாரிகளாக (Liaison Officer) நியமிக்கலாம் என்றும் ஒரு கிராம ஊராட்சி தொலைபேசி மாத கட்டணம் ரூ.750/–என்று வரம்பு நிர்ணயிக்கலாம் என்றும் இது அனைத்து கிராம ஊராட்சிக்கும் பொருந்தும் என்றும் இந்த கட்டண தொகைக்கு மேல் தொலைபேசி கட்டணம் அதிகமாக இருந்தால் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி தலைவர். தனிப்பட்ட முறையில் இந்த கூடுதல் கட்டணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

3. பொது மேலாளர், சென்னை தொலைபேசி மற்றும் பொது மேலாளர் பிஎஸ்என்எல் ஆகியோர் தொலைபேசி அமைப்பதற்கான கட்டணம் (Installation charges)மற்றும் பிணையத்தொகை (Security deposit) கைவிடுதல் (waiver) சம்மந்தமாக ஒப்புதல் அளித்துள்ளனர்.

**4.** இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அவர்களின் கருத்துரு மற்றும் பொது மேலாளர் சென்னை தொலைபேசி மற்றும் பொது மேலாளர். பிஎஸ்என்எல்/ தமிழ்நாடு தொலைபேசி தொடர்பு வட்டம் ஆகியோரின் கருத்தினை அரசு கவனமாக பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ள முடிவுசெய்து, கீழ்க்கண்ட ஆணைகளை அரசு வெளியிடுகிறது:–

i) தொலைபேசி வசதி இதுவரை இல்லாத 7238 கிராம ஊராட்சிஅலுவலகங்களுக்கு தொலைபேசி நிறுவுதற்கான கட்டணம் (Installation charges) மற்றும் பிணையத் தொகை (security deposit) இல்லாமல் தொலைபேசி இணைப்பு வழங்க (வெளியூர் தொலைபேசி வசதி இல்லாமல்) (without95/ STD facility) அனுமதிக்கப்படுகிறது.

ii) அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தொலைபேசி கட்டணம் மாத உச்சவரம்பு ரூ.750/ஆக நிர்ணயிக்கப்படுகிறது. இந்த உச்சவரம்பிற்குமேல் தொலைபேசி கட்டணம். இருந்தால் அதிகப்படியான தொகையை சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர் அவரது தனிப்பட்ட பொறுப்பில் செலுத்த வேண்டும்.

iii) கிராம ஊராட்சித் தலைவர்கள் சென்னை தொலைபேசி மற்றும் பிஎஸ்என்எல்க்கு செலுத்த வேண்டிய தொலைபேசி கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்துவதை இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அவர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

IV) கிராம ஊராட்சிகள் பெயர் மற்றும் முகவரி ஆகிய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

V) வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து (கிராம ஊராட்சி) பூர்த்தி செய்து பெறப்பட்ட விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட மாவட்ட தொலைபேசி நிறுவன பொது மேலாளிரிடம் கொடுத்து தொலைபேசி இணைப்பு பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்கள் தொடர்பு அதிகாரிகளாக (Liaison Officer) நியமிக்கப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. தீனபந்து**
அரசு செயலாளர் (பொறுப்பு)